2003 மார்ச் 28]

126—

கட்டடத்தைப் புதுப்பித்தல்

***23852—திரு. ஜி. கோதண்டராமன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முகையூர் தொகுதி, மணலூர்பேட்டையில் இருக்கும் ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடத்தைப் புதுப்பிக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) முகையூர் தொகுதி, மணலூர்பேட்டை ஆரம்ப சுகாதார நிலையத்திலுள்ள பழுதுகள் ஏற்கெனவே சரிசெய்யப்பட்டுள்ளன. மேலும் அந்த ஆரம்ப சுகாதார நிலையத்தைப் புதுப்பிக்க அல்லது பழுதுடன் இருந்தால் பழுதுபார்க்க என்ன செய்ய வேண்டும் என்று உறுப்பினர் அவர்கள் சொல்வாரேயானால் ஆர்.சி.எச். அதாவது பேறுசார் மற்றும் குழந்தைகள் நல திட்டத்தின் கீழ் அதற்குத் தேவையான நிதியொதுக்கம் செய்யப்பட்டு அதைச் செய்து கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.

TRUTH ALONE TRIUMPHS

முற்பகல் 10-30

திரு. ஜி. கோதண்டராமன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் எங்கள் இதய தெய்வம், 6½ கோடி தமிழக மக்களின் இதயங்களில் நீங்கா இடம் பெற்றிருக்கும் அம்மா அவர்கள், நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்ற பழமொழிக்கேற்ப தமிழக மக்களின் சுகாதார நிலையை மேம்படுத்த இந்த ஆண்டு ரூ.1380.48 கோடி நிதி ஒதுக்கியுள்ளார்கள். எனவே, ஆன்றோர்களும், சான்றோர்களும் அம்மா அவர்களைப் பாராட்டுகிறார்கள். தொடக்க சுகாதார மையங்களை 30 படுக்கை வசதிகள் கொண்ட மருத்துவமனையாக தரம் உயர்த்தி நடவடிக்கை எடுத்து அரசு செயல்படுத்தி வருகிறது. அம்மா அரசு இந்த ஆண்டும்

[2003 மார்ச் 28

35 தொடக்க சுகாதார நிலையங்களை நிலை உயர்த்துவதற்கு எடுத்துள்ளது. மணலூர்பேட்டை பேரூராட்சியாகும். இங்குள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் தினந்தோறும் சுற்றியுள்ள 15 கிராமங்களிலிருந்து மக்கள் வந்து மருத்துவ சிகிச்சை பெற்றுச் செல்கிறார்கள். இங்குள்ள கட்டடம் மிகவும் பழைய கட்டடமாகும். மருத்துவர் அறை, மருந்து கிடங்கு ஆகியவற்றில் மழைக்காலங்களில் முழுவதும் கசிவு ஏற்படுகின்றது. ஆகவே, கட்டடம் புதுப்பிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன். பிரசவ வசதிகளுடன்கூடிய 30 படுக்கைகள் வசதி கொண்ட மருத்துவமனை, ஆய்வுக்கூடம், சுற்றுச்சுவர் ஆகியவை கட்டிக்கொடுக்கப்படுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்துவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. அந்த வகையில் மாண்புமிகு உறுப்பினருடைய தொகுதியான முகையூர் தொகுதியில், முகையூர் ஊராட்சி ஒன்றியத்தில் முகையூர் ஆரம்ப சுகாதார நிலையம்தான் ஒன்றியத்தினுடைய பிரதான ஆரம்ப சுகாதார நிலையமாக இருந்து வருகிறது. அதைத்தான் 30 படுக்கைகள் கொண்டதாக தரம் உயர்த்துவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. ஒருவேளை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முகையூர் ஆரம்ப சுகாதார நிலையத்தைவிட மணலூர்பேட்டை ஆரம்ப சுகாதார நிலையம்தான் தரம் உயர்த்துவதற்கு தகுதியானது என்று கருதுவாரேயானால் எழுத்துமூலமாக அந்தக் கோரிக்கையை அவர்கள் கொடுப்பாரேயானால், அந்த ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்துவதற்கு இந்த அரசு பரிசீலிக்கும். அதைப்போல இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்போது செயல்பட்டு வருகிற அந்த சுகாதார நிலையம் பழுதுபார்க்க வேண்டிய நிலைமையிலே இருக்கிறது என்று சொன்னார்கள். அதற்கு நிதி ஒதுக்கம் செய்யப்பட்டு அது நிச்சயமாக பழுதுபார்க்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: டாக்டர் ஆர். கோவிந்தசாமி அவர்கள்.

டாக்டர் ஆர். கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி இல்லையென்றாலும் இதற்கு

2003 மார்ச் 28]

முன்னால் உள்ள கேள்விக்கு மீண்டும் ஒரு விளக்கம் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கேட்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் எம்.பி.பி.எஸ்.-தானே ?

டாக்டர் ஆர். ,கோவிந்தசாமி: எம்.டி.-ங்க.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: எம்.டி.-யா, இல்லை, இல்லை. Veterinary Doctor-கூட Doctor என்று போட்டுக் கொள்வார்கள், அதற்குத்தான். (சிரிப்பு)

டாக்டர் ஆர். கோவிந்தசாமி: முதலிலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் பேசும்போது SARS Pneumonitis பற்றி பேசினார்கள். அது ஒரு வைரஸ் கிரிமியால் ஏற்படக்கூடிய நோய். உடனடியாகக் கண்டுபிடித்தால் தடுக்கக்கூடிய நோய். It is a different type of A.R.D.S. Artificial Respiratory Distress Syndrome மூச்சுத் திணறல் ஏற்படும். ஜுரம் வரும், கட்டுக்கடங்காமல் இருக்கும். அதையெல்லாம் உடனடியாகக் கண்டுபிடித்தால் நோயைக் கட்டுப்படுத்தலாம், சீராக்கலாம். அதைப்போலவே, மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள் பேசும்போது, குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்தவர்களுக்கு மீண்டும் குழந்தை பிறக்கிறது என்று கூறினார்கள். உண்மையிலே Recanilisation 1% possibility உண்டு. எவ்வளவுதான் அந்த டியூபைக் கட் பண்ணி எடுத்தாலும்கூட, அந்த இரண்டு டியூபும் சேருவதற்கு மீண்டும் வாய்ப்புகள் உண்டு. அதை இப்போது laparascopic முறையிலே Laser முறையிலே மீண்டும் அறுவை சிகிச்சை செய்கிறார்கள். ஆகவே, குடும்பத்தில் குழப்பம் ஏற்படாது. இவற்றையெல்லாம் தடுக்க மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் Proper Doctors, Anaesthetists, Surgeon போன்ற டாக்டர்களை நியமிக்க வேண்டும். நிறைய மருத்துவமனைகளில் டாக்டர்கள் பற்றாக்குறை இருக்கிறது. அதிலும் குறிப்பாக Proper Sterilisation கிடையாது. அதைவிட முக்கியமானது, குளிரூட்டு சாதனங்கள் பொருந்திய அறுவை சிகிச்சை அரங்குகள் இல்லாததுதான் குறை

என்று எண்ணுகிறேன். இதையெல்லாம் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கவனத்தில் கொண்டு உடனடியாக நிவர்த்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-35

மாண்புமிகு திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கோவிந்தசாமி அவர்கள் ஒரு சிறந்த மருத்துவ நிபுணர். எனவே, இந்த அரசுக்கு நல்ல ஆலோசனைகளைக் கூறியிருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு பொறுப்பேற்ற பிறகுதான் அவர் சொன்னதைப்போல, அவர் இங்கே சுட்டிக்காட்டியதைப்போல, அனைத்து அறுவை சிகிச்சை அரங்குகளுக்கும் இப்போது குளிர்சாதன வசதி செய்து கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. சில அறுவை சிகிச்சை அரங்குகளிலே Sterilisation குறைபாடுகள் கண்டறியப்பட்டு முறையாக Sterilisation செய்ய வேண்டுமென்று மருத்துவ நிபுணர்களுக்கு நாங்கள் அறிவுறுத்தியிருக்கிறோம். டாக்டர்கள் பற்றாக்குறையைப் பற்றிச் சொன்னார்கள். அவர்களுக்கே நன்றாகத் தெரியும். இந்த அறுவை சிகிச்சை செய்வதற்கு மயக்க மருந்து நிபுணர்கள் பற்றாக்குறையாக இருக்கிறார்கள். அதற்குக்கூட நம்முடைய டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அரசு இப்போது வெளியிலேருந்து அந்த Anaesthetist-களை hire செய்வதற்குக்கூட ஏற்பாடு செய்திருக்கிறது. எனவே, பற்றாக்குறையைப் போக்குவதற்கு இந்த ஆண்டு மட்டும் 500 புதிய டாக்டர்களை நியமிப்பதற்கு புரட்சித்தலைவி அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்தப் பணி இப்போது தொடங்கப்பட்டு, நம்முடைய தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலமாக அந்தத் தேர்வும் நடக்க இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் *127*, திரு. பி.கே. சேகர்பாபு, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.